# கிடைத்தது மாற்று

சௌக்கியமா அம்மா?" என்று வினவினார் அந்த மனிதர். வினாக்குறியைப் போல வளைந்திருந்த என் பார்வையை ஆச்சரியக் குறிபோல நிமிர்த்தி, நான் அந்த மனிதரை ஏறிட்டுப் பார்த்தேன். "உம் - சௌக்கியந்தான்!" என்றேன்.

"அவர்தான் அகத்துக்காரராக்கும்! இங்கேயாம்மா நீங்கள் இருக்கிறீர்கள்?" என்று மேலும் கேட்டார் அவர்.

"நாங்கள் லீவிலே வந்திருக்கோம் இங்கே. பட்டணத்துலே இருக்கோம்.... இப்போ . . . "

நான் ஒருமாதிரி இழுத்தாற்போலத்தான் பேசினேன். அவர் திடுக்கென்று "ஏம்மா.... என்னைத் தெரியறதோ இல்லையோ?" என்று கேட்டுவிட்டார்.

அந்த மனுஷரை எங்கோ பார்த்திருந்ததாக எனக்குத் தோன்றி இருந்தது. ஆனால் அவர் இன்னார் என்று தெரியவில்லை குறிப்பாக. ஆனால் அவர் வெகு அக்கரையாக குசலம் விசாரிக்கத் தொடங்கியதும், அவருடைய திருப்திக்காக பதில்களைக் கூறி அப்போதைய நிலைமையைச் சமாளித்துவிட முயன்றுகொண்டிருந்தேன். ஆனால் என் முகபாவமும் பேச்சுமுறையும் அவருக்கு உண்மையைச் சொல்லிவிட்டன. கேட்டுவிட்டார் அந்தக் கேள்வி. நான் கொஞ்சம் திடுக்கிட்டுத்தான் போனேன். 'முகம் உண்மை சொல்லிவிட்டது! நாவு பொய் பேசுவானேன்?' என்று தோன்றியது எனக்கு.

சிறிது சங்கோசத்துடனேயே, "பார்த்த ஞாபகமாத்தான் இருக்கு! ஆனால் சரியாக இன்னாருன்னு தெரியல்லையே!" என்று சொல்லிவிட்டேன்.

ஒரு துணுக்கத்துடன் அவர், "தெரியல்லையாம்மா? . . . சரி, நான் போய்வரட்டுமாம்மா?" என்று கூறி, விடை பெற்றுக்கொண்டு அங்கிருந்து எங்களைத் தாண்டிக் கொண்டு சரசரவென்று விரைந்தார். என்னை அவர் மனத்தாங்கல் தொனிக்கக் கேட்கும்போது, அவருடைய கண்கள் என் கணவரை ஒரு கீழ் நோக்கு நோக்கியதை நான் கவனித்தேன். தம்மை நான் அடையாளங் கண்டுகொள்ளாததைப்பற்றி என் கணவரிடம் அவை வருத்தத்தோடு பேசுவது போலவும், இப்படி நேர்ந்ததற்கு வெட்கப்படுவது போலவும்பட்டது எனக்கு.

நேர் எதிராக வந்துகொண்டிருந்த எங்களுடைய இந்தச் சிறு சந்திப்பு நிகழ்ந்தபிறகு, எங்கள் இருதிறத்தாருக்கும் இடையே பெருகிப் பெருகிச் சென்ற பாதை இடைவெளியின் ஓட்டத்தைப் போலவே என் மன ஓட்டமும் மாறியது. கடகடவென்று ஓடும் ரயிலிலே உட்கார்ந்து கொண்டு, எதிரேயிருந்து ஓடி வந்து பக்கவாட்டிலே போகும் மற்றொரு ரயிலைப் பார்க்கும்போது ஏற்படுமே ஒரு அழற்சி, அதைப்போலத்தான் எனக்கும் ஒரு அழற்சி ஏற்பட்டது.

ஒரு கணம் பிரமை பிடித்தாற்போல இருந்தது - ஆனால் நடந்து கொண்டேயிருந்தேன். கைவீசி நடந்துவரும் என் கணவரின் கை தற்செயலாக என்மீது பட்டதும் அவர் இருப்பது தெரிந்தது. அவரைப் பார்த்தேன். அவரும் லேசாகச் சிரித்தவண்ணம் என்னைப் பார்த்தார்.

"பாவம், அந்த மனுஷர் என்ன நினைத்தாரோ? 'தெரியவில்லையே' என்று சொல்லிவிட்டேனே! - அவரை எங்கோ நிச்சயம் பார்த்திருக்கிறேனே! பாவம், எவ்வளவு அக்கரையாக குசலம் விசாரிக்க வந்தாரே! 'தெரியவில்லை' என்றதும் முகம் சுண்டிப் போயிற்றே! "தெரியாமலென்ன!" என்று சொல்லியிருந்தால்.......

இப்படியாக என் மனதிலே எழுந்த சிந்தனைக் குன்று என் முகத்தினூடும் தெரிந்தது போலும்.

"என்ன, உச்சிப்பிள்ளையாரை - கல்லுப்பிள்ளையாரைப் பார்த்தபோது இருந்த உத்ஸாகம் எல்லாம் - உசிரோடு இருக்கிற நிஜப் பிள்ளையாரைப் பார்த்துப் பறந்துடுத்தே!" என்று வேடிக்கை பண்ணினார் என் கணவர்.

"அவர் யாருன்னு குறிப்பா தெரியல்லை - ஆனால் எங்கோ பார்த்தும் இருக்கேன்! - தெரியல்லையேன்னு ஏன் சொன்னோம் என்று இருக்கு," என்றேன் நான். கொஞ்சம் கட்டை குட்டையாக மாநிறமாக இருந்த அந்த மனிதரை என் கணவர் 'பிள்ளையார்' என்று வர்ணித்தது கூட எனக்குக் கோபந்தான். ஏற்கெனவே அந்த மனிதரைப் பற்றி நான் அங்கலாய்ப்புப் பட்டுக்கொண்டிருக்கையிலே, அவரும் குறும்பு பேசினால்?

"தெரியறதே" என்று சொல்லிவிடலாம்! ஆனால் சில சமயம் சில பேர் நம் முகத்தைக் கண்டே உண்மை அறிந்துவிடுவார்கள்.

"'யார், சொல்லு பார்க்கலாம்!' என்று கேட்டுவிட்டால், அப்பொழுது நாம் முழித்தால், அதுதான் அவமானமாயிருக்கும்! 'ஏன் பொய் சொல்லணும்!' என்று அப்போதுதான் நிஷ்டூரம் தோன்றும் நம் மேலே! இதுபோல சந்தப்பங்கள் சிக்கலானவைதான்! ஆனால் உண்மையாயிருப்பதே நல்லது!" என்று நிதானமாகச் சொல்லிக்கொண்டே வந்தார் என் கணவர்.

என் மனக் குழப்பத்தை நீக்குவதாகவேயிருந்தது அவர் பேச்சு; நான் அளித்த பதில் தவறானதல்ல என்ற ஆறுதல் எனக்கு ஏற்படத்தான் செய்தது.

"ஆமாம்!" என்றுமட்டும் சொன்னேன். உலகத்திலே இதுபோல் சிறு சிறு இக்கட்டான சம்பவங்கள் எத்தனையோ! எல்லோருக்கும் இதுபோல அனுபவமிருக்கும். அந்த மனிதர் தவறாக ஒன்றும் எண்ணமாட்டார் என்று சமாதானம் சொல்லிக்கொண்டேன்.

மலைக்கோட்டையை ஏறிச் சுற்றிப்பார்த்துவிட்டு சித்தியின் அகத்திற்குப் போய்க்கொண்டிருக்கையிலே நடந்த இந்தச் சிறு சம்பவம் சித்திவீடு வந்த பின்னும் என்னுள்ளத்திலே மலைபோல உட்கார்ந்திருந்தது. சித்தியிடம் "யாரோ அந்த மனிதர்!" என்ற என் வேதனைக் கேள்வியைக் காட்டிக் கொடுக்க இஷ்டமாக இருந்தது; கஷ்டமாகவும் இருந்தது.

சித்தியின் இல்லம் வந்து ஒரு மணி நேரம் கழிந்தது. சந்திப்பினால் ஏற்பட்ட உவகையுணர்ச்சி சிறிது அடங்கியிருந்த சமயம்.

"அம்மா! பாலாவுக்கும் நேக்கும் பட்சணம் தாம்மா! எனக்குப் பசிக்கிறது வயத்தை!" என்று சொல்லிக்கொண்டு ஓடோடி வந்தாள் என் சித்தியின் பெண்.

"ஏன் உமா! அக்கா வந்திருக்கேனே பார்த்தியா? - எங்கே போயிருந்தே - பள்ளிக் கூடம் இன்னிக்கு இராதே!" என்று அவளை ஆவலுடன் விசாரித்தவாறே, அவளுடன் வந்திருந்த சிறுமியைப் பார்த்தேன்.

துருதுருவென்று நாலாபுறமும் நோக்கிக் கொண்டிருந்த அந்தப் பெண், என் கவனிப்பை உணர்ந்ததும், வெகு சங்கோசத்துடன் தலையைத் திருப்பிக்கொண்டாள்.

"பசிக்கிறதுன்னு சொல்லேன்! வயத்தைப் பசிக்கிறதுன்னு என்ன பேச்சு! முதுகையா பசிக்கும்?" என்று சித்தி பெண்ணைச் செல்லமாகக் கடிந்துகொண்டே, என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

"சித்தி! 'பசிக்கிறது என்றால்', 'முதுகு பசிக்கிறதா? வா, தோசை போடுகிறேன்!' என்று சொல்லுபவர்களும் உண்டு! சில கண்டிப்பான பாட்டிமார்கள், மாற்றாந் தாய்மார்கள் இப்படித்தான்....." என்று நானும் சிரித்துக் கொண்டே ஆரம்பித்தேன் பேச்சு.

என்னை மேலே பேச வேண்டாமென்று சமிக்ஞை செய்தது சித்தியின் கண். நிறுத்திவிட்டேன்.

சித்தி எழுந்து அலமாரியைத் திறந்து பட்சணம் எடுத்துக்கொடுத்தாள் சிறுமிகள் இருவருக்கும்; வாசலுக்கு அவர்களை அனுப்பினாள்.

"அந்தப் பொண்ணு..." என்று பேச்சுத் துவக்கினாள்.

"ஏன் சித்தி.... நானும் அந்தப் பெண்ணைப் பற்றி கேட்கணும்னு நினைச்சேன்! எங்கேயோ பார்த்த முகமாயிருக்கே சித்தி!" என்று சொன்னேன்.

"அதுதான் சொல்றேன்.... அந்தப் பெண் லால்குடியிலிருந்து அப்பாகூட வந்திருக்கு!... அவர் யார் தெரியுமா... நீ கூட பார்த்திருப்பாயே... மூன்று வருஷத்துக்கு முந்தி அங்கே என் மைத்துனன் கல்யாணம் நடந்தபோது...."

சித்தி பேச்சை முடிக்கவில்லை. நான் ஒரு துள்ளுத் துள்ளினேன்.

"ஐயையோ..... பாவம், அவரைத்தான், சித்தி, நான் வருகிற வழியிலே பார்த்தேன்! அடையாளம் தெரிஞ்சுக்கலை!" என்று என் மனக்கிளர்ச்சி தீர சித்தியிடம் மேலே விவரம் கூறிக்கொண்டு போனேன்.

"அப்போது கல்யாணச் சந்தடியிலே கிணற்றங்கரையிலே வழுக்கி விழுந்து, நெற்றியிலே புடைத்துக்கொண்டபோது அந்த மாமாதான் இரண்டுவேளை மருந்துபோட்டு என்னை ரொம்ப அக்கரையாய்க் கவனிச்சுண்டார்! அவரை நான் மறந்துட்டேனே! பாவம், அதான் அவர் அப்படி மனத்தாங்கலாய்க் கேட்டார், சித்தி!" என்று பொருமினேன். வெளிப்படையாகவே என் மனசு ரொம்பக் கஷ்டப்பட்டது.

"சித்தி! இந்தப் பெண் அப்போ ரொம்பச் சின்னப்பெண்! அம்மா சீக்காய்க் கிடந்திருந்தாளே! இவளை 'அந்த மாமா' தான் சதா கவனிச்சுண்டு இருந்தாரே! இப்போ அந்த மாமி உடம்பு எப்படியிருக்கு! என்று கேட்டேன்.

"அதான் சொல்ல வந்தேன். இந்தப் பெண்ணுக்கு அம்மா போய் ஒரு வருஷமாச்சு! அவருக்குப் புதுப் பெண்டாட்டி வந்து இரண்டு மாசமாகிறது!" என்றாள் சித்தி திடுமென்று, நான் திடுக்கிட்டேன். "ஐயோ பாவம்!" என்றேன். என் மனதிலே கொந்தளிப்பு விவரிக்க இயலாததாக இருந்தது.

'ஆஹா! என்ன மனுஷன்! ஒரு பெண்ணின் வாழ்வைப் பலி வாங்கிவிட்டார், பலரைப்போல. என் காயத்தை ஆற்ற பிரமாதமாக முன் வந்தாரே - இப்போது ஆற்ற முடியாத ரணத்தை உண்டாக்கிவிட்டாரே, ஒரு இளம் பெண்ணின் உள்ளத்திலே! அவருடைய மனதை நோகவைத்துவிட்டதாக வருந்தினோமே! இந்த மனுஷருக்கு இந்த வருத்தமும் ஒரு வருத்தம் ஆகுமா? அவருடைய இளம் மனையாள் மனம் என்னபாடுபடுகிறதோ?' என்று உள்ளங்கொதித்தேன்.

பிறகு, சித்தி "இப்போதானே வந்திருக்காள் புதியவள்? கொட்டம் ஆரம்பிக்கவில்லை! இந்தச் சின்னவளை - பாலாவை - நன்றாகத்தான் இதுவரைக்கும் பார்த்துண்டு வந்திண்டு இருக்காளாம்! மெள்ள ஆரம்பிக்கும் இதோட கஷ்டம்!" என்று சொன்னபோது நான் அதையும் ஆமோதித்தேன்!

"ஆமாம் - பின்னே என்ன! குழந்தைகளுக்கு சௌரியமாயிருப்பதாகப் பண்ணிக்கிறது, அதுகளுக்குக் கஷ்டத்துக்குத்தானே ஆகிறது!" என்று சொன்னேன், சிறுமி மேலே அனுதாபத்தால். உண்மைக்கோபம் அந்த மனிதர்மேல்தான்!

சித்தியின் வீட்டில் வந்து இறங்கியிருக்கும் அந்த மனுஷன் அன்று இரவு சாப்பாட்டிற்கு அங்கு வருவதாகச் சொல்லிப் போயிருந்ததை அறிந்தேன். அவர் வந்தால், 'மன்னிப்புக்கேட்கணும்' என்று எண்ணியிருக்க வேண்டிய என் மனம், 'போடு போடு என்று போட்டு முழிக்க வைக்கணும் ஆசாமியை!' என்று எண்ணத் தொடங்கியது!

நல்லவேளை, அந்த மனிதரைப் பார்த்துப் பேசவும் வேண்டி இராமல், பேசாமலும் திண்டாட வகையில்லாமல், அவர் இரவு வீடு திரும்புமுன், நாங்களே அங்கிருந்து கிளம்ப

வழி பிறந்தது. நாங்கள் என் மைத்துனர் வீட்டிலே இறங்கியிருந்தோம். அன்றிரவே அங்கிருந்து மதுரை புறப்பட எண்ணியிருந்தோம். சித்தியைப் பார்த்துவிட்டுப்போகும் படலம் முடிந்தது, எங்கள் திட்டப்படி.

லீவு முடிந்து சென்னை மீண்ட பிறகு எனக்கு திருச்சியில் ஏற்பட்ட உள்ளக் கிளர்ச்சி பிரமாதமாகத் தோன்றாவிட்டாலும், மறந்துவிடக்கூடியதாக இல்லை. 'அந்த மனுஷரைப் பற்றி நினைத்தபொழுது ஆத்திரம் வருவது குறைந்ததே தவிர, அந்த 'இளையாளை' எண்ணும்பொழுது அனுதாபம் வளர்வதாகவே இருந்தது முதல்தாரமாக, அழகிய வாலிபருக்கு வாழ்க்கைப்பட்டிருப்பவள் நான். என் கணவர் எந்தப் பெண்ணையாவது புகழ்ந்தாலும், அல்லது சிறிது அபிமானங்காட்டினாலும், பொறாமை ஏற்பட்டுவிடும் எனக்கு. இளையாளாக வாழ்பவர்கள் மனம், கணவனின் முதற் பந்தத்தை எண்ணி என்ன பாடுபடும், எப்படிப் பொறுக்கும் என்பன போன்ற ஆராய்ச்சிகளில், இறங்குவதுண்டு நான். 'பாவம்!மகா கஷ்டம்தான்! தவிர்க்கமுடியாத விதி ஒன்று உண்டே, அது அவர்கள் துடிப்பை லட்சியம் செய்கிறதா?' என்ற அனுதாபம் உண்டு.

இப்போது 'பிள்ளையார்' போன்ற இந்த அழகருக்கு, இரண்டாம் மனைவியாக வாய்த்துள்ள இளம் பெண்ணைப் பற்றி எப்படிக் கற்பனை செய்யாமலிருப்பேன்? ஏன் அவள் மனத்துயரை ஆராய்ச்சி செய்யமாட்டேன்? என் மனமார்ந்த அனுதாபங்களை ஏன் மானஸிகமாய்ச் செலுத்தமாட்டேன்?

பலமாதங்கள் பறந்தன. சென்னையிலிருந்து 'இந்தூர்' வந்துவிட்டோம். நாங்கள் தமிழ்நாட்டின் தனிப்பெரும் நகரமாகவும், கலைகளின் வளர்ச்சிக்கு இருப்பிடமாகவும் நான் போற்றி வந்த சென்னையை விட்டு வந்த ஒரு வேதனையால் நான் அடிக்கடி தமிழ்நாட்டுடன் தொடர்பு கொண்டேன். கடிதமூலம் பெற்றோர்க்குப் புக்ககத்தாருக்கும் எழுதுவது தவிர, மற்ற உற்றார் உறவினர்களுக்கும் எழுதி மகிழும் ஆர்வம் எழுந்தது.

சித்தி எழுதிய ஒரு கடிதம் மூலம் அந்த மனுஷர் பம்பாய்ப் பக்கம் போய்விட்டதாகவும், அவருடைய குடும்பமும் அவரும் இருப்பது எந்த ஊர் என்பது தெரியாது என்றும் அறிந்தேன்.

"இளையாள் நல்லவளாகத்தான் இருப்பாள் போலிருக்கு! அந்தக் குழந்தை பாலாவை இங்கிருந்த ஒன்றரை வருஷமும் நன்றாகப் பார்த்துக்கொண்டிருந்ததாகக் கேள்விப்பட்டேன்!" என்று காணப்பட்ட குறிப்பு, ஒரு புதிர்போல முதலில் ஏனோ என்னைக் குழப்பியது. பிறகு நீண்ட ஆராய்ச்சி எதுவுமின்றி ஒரு முடிவு செய்தது.

'பாவம், நல்லவளாக, வாயும் கையுமில்லாமல்தானே இருப்பாள்! விதியை நம்பி, இரண்டாம் பெண்டாட்டியாக வாழ ஒப்பியவள், எல்லாவற்றுக்கும் வாயடைத்துத்தானே இருப்பாள்!' என்று சொல்லிக் கொண்டேன்.

என் கோபமெல்லாம், முதற் பெண்டாட்டி போன ஒரு வருடத்திற்குள் வேறு மனையாளை ஏற்கத் துணிந்த அந்த ஆசை நிறைக்காத மனிதர் மீதுதானே!

நாட்கள் உருண்டு சென்று மாதங்களை உருட்டித் தள்ளின. நான் தமிழ்நாடு நோக்கி வந்து கொண்டிருந்தேன். எனக்குத் துணையாக எனக்குத் தெரிந்த வேறொரு தமிழ்க்குடும்பம் வந்து கொண்டிருந்தது. ஆனால் அப்புறம் பெட்டியில் தமிழகப் பெண்கள் பல பேர் துணை சேர்ந்தார்கள்.

தமிழ்ப்பத்திரிகையொன்றில் ஒரு கதை என்னை மனம் உருகச் செய்தது. இரண்டாம் மனையாளாக வாழ்க்கைப்பட்ட ஒரு பெண்ணின் மனக் கஷ்டங்களைப் பற்றி, கல்லும் கரையும்படி எடுத்துக் கூறப்பட்டிருந்தது.

என் பக்கத்தில் அமர்ந்திருந்த மாதிடம் "இதைப் படியுங்கள்," என்று கொடுத்தேன். நான் ரசித்ததுபோல பிறரும் ஒரு விஷயம் ரசிப்பதை விரும்பினேன், அதுவே காரணம்.

"எவ்வளவு உருக்கமாயிருக்கிறது! ஓரோர் இளையாளும் இப்படித்தான் எண்ணி அழுவாள்!" என்று சொல்லிக் கொண்டே கதையைப் படிக்கத் தூண்டினேன்.

அமைதியுடன் கதையைப் படித்த அந்தப் பெண்மணி, அமைதியுடனே திரும்பினாள் என் பக்கம்.

"நானும் ஒரு இளையாள்தான்! ஆனால் நான் இப்படி எண்ணுவதில்லை!" என்றாள்.

"என்ன?" என்று கேட்டேன் ஆச்சரியத்துடன் என் கேள்வித் துடிப்பு அடங்குமாறு. அப்புறம் அந்த மாது பதில் சொல்லிவிட்டாள்.

'அந்த மனிதரின்" மனைவிதான் அந்த மாது. அவருடைய பெண் - அன்று சித்தி வீட்டில் ஒரு சில நிமிஷம் என்னைக் கவர்ந்து என் கண்களை நிலை நிறுத்திய பெண் - இந்த மாதையும் கவர்ந்தாளாம். அவர் விரும்பாவிட்டாலும், அவரையே திருமணம் செய்துகொள்ளத் தான் விரும்பியதாகவும், அந்தப் பெண்ணுக்கு தாயாராகத்தான் ஸ்தானம் ஏற்க முன் சென்றதாயும் அந்த மாது கூறுகையிலே, அவளுடைய நல்லுணர்ச்சிகளை அபாரமாகப் பாராட்டியது என் மனது.

"அவரைப் போல புருஷர் இருக்கமாட்டார்!" என்று அந்தப் பெண் கூறி முடித்தபோது, அந்த மனிதரையும் வெகுவாகப் பாராட்டிவிட்டது என்னுள்ளம்.

என்ன இருந்தாலும் இளையாள் என்பவளுக்குக் குறை என்பது இராதா? அப்படிக் குறை கொண்டிருப்பவள், புருஷனை இப்படி ஒரே அடியாகக் கொண்டாடினால் அந்தப் புருஷன் உண்மையிலேயே எவ்வளவு சிறந்த கணவனாக இருக்க வேண்டும்! ஆம், இப்படித்தான் அப்போதும் நான் எண்ணினேன். என்ன இருந்தாலும் இளையாள் என்பவளுக்கு மனக்குறை என்பது இருக்கும் என்பதுதான் என் உறுதியாக இருந்தது!

"வாழ்க்கை சம்பவங்கள்தான் கதையாகப் பரிமளிக்கும் என்பதைக் கண்டேன். கதைபோல வாழ்க்கையில் அதிசயமும் புதுமையும் நிகழ்வதுண்டு என்பதையும் காண்கிறேன்!" என்றேன். பிறகு மெல்ல, "புருஷன் முன்னர் ஒரு மனைவியுடன் கருதொத்து இல்லறம் நடத்தியிருக்கிறான் என்பதை ஒரு பெண்ணின் உள்ளம் எப்படி மனங்கோணாமல் ஏற்கும்?" என்று என் வியப்பை வெளியிட்டேன்.

"அன்பு மிகுதியினால்தானே அந்தப் பொறாமை! அந்த அன்பானது - அதைக் கொண்ட பெண் மனமானது - அவனைப் பேணவும் பேணும். அந்தப் பெண் மனமானது, தான் கொண்ட கணவன் என்ற ஒரு பாசத்துடன், அந்தக் கணவன்பால் தன் மனதையும், அன்பையும் நிலைநாட்டிவிடுகிறது!" என்று பதில் வந்தது மாதிடமிருந்து. தெய்வமோ அசரீரியோ பேசுவதுபோல பரவசப்பட்டேடன். என் பரவசத் தன்மையை அவளிடமே சொல்லிவிட்டேன்.

அன்றிரவு ரயிலில் உறங்குவதற்கு முன்னும், பின்னும் கூட எனக்கு அந்தப் பெண்மணியைப் பற்றியும், அவளுடைய ஆதரிச புருஷரைப் பற்றியும்தான் நினைப்பு, யோசனை.

மறுநாள் சென்னையில் வண்டியிறங்கும் சமயம் எல்லோரும் ஒரு பரபரப்பு அடைந்திருந்தோம். அந்த மாது ஒரு கவரை என் கையில் திணித்து "இதை நினைவாக வைத்திரும்மா!" என்று சொல்லிவிட்டு, ஒரு பெட்டி படுக்கை கொண்ட சிறு லக்கேஜுடன் இறங்கினாள். சென்னை சென்ட்ரலின் நீண்ட பிளாட்பாரத்திலே, கூட்டத்திலே கலந்து மறைந்தாள் அந்தப் பெண்மணி.

"நான் தெய்வமுமல்ல, அசரீரியுமல்ல! பெண்ணுருவிலே பேயுள்ளம் படைத்தவள் என்றே சொல்லலாம்! நான் ஒரு விதவை!"

என் கண்கள் சுழன்றன- மேலே படிக்க முடியவில்லை. கவரிலிருந்து எடுத்த கடிதம் வாடகை மோட்டாரின் ஓட்டத்துக்குச் சரியாகப் படபடத்தது.

"ஆகா! . . . கல்யாணமான இரண்டு வருடங்களுக்குள் விதவையாகிவிட்டாள்! என்னதான் இந்த மாது கல்யாணம் செய்து கொள்ள இணங்கியிருந்தாலும், அந்த மனுஷர் ஒப்புக்கொள்ளலாமா? இருபது வயதுப் பெண்ணுக்கு, இளம் பெண்ணுக்குத் தாலி கட்ட

ஒப்பலாமா ஒரு அரைக் கிழவரின் மனம்! அது தவறுதானே!" என்று யோசித்து கொண்டே, 'விதவை' என்ற பட்டத்தின் கொடுமையைச் சிந்தித்தேன்.

ஏனோ திடீரென்று சிந்தனை கலைந்தது.

நான் எதிர்பாராதது இந்த விஷயம்!..... ஆம்..... நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை, இந்தப் பெண் 'விதவை' என்று! ஏன் எதிர்பார்க்கவில்லை?

பெண்ணின் தோற்றம் - அப்படி ஒரு எண்ணத்தை.... சந்தேகத்தைக்கூட புகுத்துவதாக இருக்கவில்லை!

ஆம், அதுதான் காரணம்.

எப்படியோ ஒரு அமைதி ஏற்பட்டது எனக்கு. ஒரு நொடியில் 'விதவை'க் கோலம் அந்தப் பெண்மணியைக் கொஞ்சமும் அண்டவில்லை என்ற ஆறுதலோ - என்ன காரணமோ......

கடிதத்திலே இன்னும் ஏதோ எழுதியிருக்கிறது என்ற நினைப்பு வந்தது. சரியாக நிமிர்த்திப் பிடித்தேன் கடிதத்தை.

"ஆனால், உண்மை மறைத்தே பேசிவிட்டேன் உன்னிடம். நீ காட்டிய தனி பரிவைக் கண்டு உன்னிடம் உண்மையைக் மறைக்க இஷ்டப்படவில்லை....... ஆனால் மற்றும் பலபேர் இருந்தமையால் உண்மை ஒளித்தேன். இதோ உன்னிடம் மாத்திரம் உண்மை கூற வழி....

என் கணவர் இப்போது இந்த மண்ணுலகிலே இல்லை. அவருடைய புதல்வியும் என் பாதுகாப்பிலே இல்லை. அனாதாசிரமம் ஒன்றில் வளர்கிறாள்.

நான் அவருடைய இரண்டாம் மனைவிதான். ஆனால் அவர் என்னை மணந்ததால் நன்மையே செய்தார். வாழ்விலே இன்பமோ, கையிலே பொருளோ காணவும் முடியாத நிலைமையில் நான் இருந்ததை அறிந்தே அவர் என்னை மனைவியாகக் கொண்டார். என்மேல் யாரும் அனுதாபங்கொள்ளும்படியாகவே, என்னைக்காட்டிக் கொடுக்காமல் இருந்தார், என்னை நடத்தினார். இல்லற வாழ்க்கையைச் சிலகாலமே அவருடன் அனுபவித்தேன். ஆனால் என் பிற்கால வாழ்க்கை அல்லற்படாமலிருக்க, வேண்டிய பொருள் வசதியும், வாழ்க்கை வசதியும் அளித்துப் போயிருக்கிறார். கையிலே ஒரு காசில்லாமல் அனாதையாக, விதவையாக இருந்த என்னை மணந்து, என் மானம் காத்தார்! இன்று நான் மீண்டும் விதவையானாலும், இடைக்காலத்தில் அவர் அளித்த மஞ்சட்குங்குமம், இன்று பொருளுருவில் என்னைக்காக்கிறது!

ஆம், அவருக்கு நான் இரண்டாம் மனைவியாயிருந்தேன்! ஆனால் அவரும் எனக்கு இரண்டாம் கணவர்தாம். அந்த உண்மையை அவர் மட்டுமே அறிந்திருந்தார் - அறிந்துதான் பெருந்தன்மையுடன் என்னை ஏற்றார்!"

இந்த முடிவு என்னை ஒரு உலுக்கு உலுக்கியது. என்னை ஏற்றிச் சென்று கொண்டிருந்த மோட்டார், நேர்த்தியான ரஸ்தாவிலே போய்க்கொண்டிருந்தாலும், ஏனோ மலைமீதிருந்து உருளுவதுபோலத்தான் எனக்கு படபடப்பு, குழப்பம்.

அன்று உச்சிப்பிள்ளையாரைப் பார்த்துவிட்டு வரும் வழியில் என்னைக் கண்டதும் வெகு அக்கரையுடன், பரிவுடன் குசலம் விசாரித்த அந்த மாமாவின் தோற்றம் என் மனக்கண்முன் வந்து நின்றது.

அவருடைய தோற்றமும் கேள்வியும் அன்று அளித்த அங்கலாய்ப்பும், அந்தக் கண்களிலே அப்போது நான் கண்ட கனிவும் பேச்சிலே தொனித்த மனத்தாங்கலும் பரிதாபமும் புடமிட்ட பொன்போல புத்தொளி பெற்றன.

ஒருவரைப் பற்றி நாம் விதவிதமான சமயங்களிலே விதவித அபிப்பிராயங்கள் கொண்டாலும் முதன் முதலிலே, முதற்பார்வையிலே ஏற்படும் அபிப்பிராயந்தான் நிலைக்கிறது.

நிலையற்ற பாதரசம் அழிவற்ற பொன்னையும் உருமாற்றிவிடுகிறது - ஆனால் அதற்கும் மாற்று உண்டு அல்லவா? நிலையற்ற மனமும், அப்படித்தான் பொன் போலவே உறுதியும் உயர்வுமுள்ள என் எண்ணத்தை உருமாற்றியிருந்தது. முதன் முதலிலே ஒருநாள் என் நெற்றி காயத்தை ஆற்ற அவர் முன்வந்தபோது எனக்கு அவர்மீது ஏற்பட்ட சிறந்த அபிப்பிராயம் எத்தனையோ மாறுதல்களை அடைந்துவிட்டது. இறுதியில் காலம் கொடுத்தது மாற்று.

பொன்னைப் பறிகொடுக்க யாரே விரும்புவார்? நல்ல எண்ணங்கள் பறிபோவதை யாரே ஒப்புவர்? எனக்குக் கிடைத்தது மாற்று. நான் காப்பாற்றிக்கொண்டேன். பொன்னான அபிப்பிராயம் நிலைத்தது!

**********

(சுதேசமித்திரன், செப்டம்பர் 19, 1948)